## சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

## O.S. No.314/2023

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.கோகுலகிருஷ்ணன் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கோகுலகிருஷ்ணன் | தொழில் : துணை மேலாளர், SBI |
| த/பெ : தங்கமுத்து | கிராமம் : சத்தியமங்கலம் |
| வயது : | தாலுக்கா : சத்தியமங்கலம் |

வா.சா.1 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி வங்கி கிளையின் துணை மேலாளர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

04.03.2020ம் தேதியிட்ட தனிப்பட்ட கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 04.03.2020ம் தேதியிட்ட கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 04.03.2020ம் தேதியிட்ட கடன் ஏற்பாடு விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 04.03.2020ம் தேதியிட்ட விரைவு கடன் விண்ணப்ப விவரம் அசல் வா.சா.ஆ.4

ஆகவும், 27.02.2023ம் தேதியிட்ட கடன் உயிர்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 17.03.2023ம் தேதியிட்ட கடன் கணக்கு பட்டியல் (கடன் கணக்கு எண்.3918987710З) சான்று நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 17.03.2023ம் தேதியிட்ட கடன் கணக்கு பட்டியல் (கடன் கணக்கு எண்.40243573045) சான்று நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 23.03.2023ம் தேதியிட்ட வாதி வங்கி வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும், 31.03.2023ம் தேதியிட்ட வழக்குரைஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த கவர் அசல் வா.சா.ஆ.9 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.